**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு ரூபா 31,270,600 ஆக இருந்த போதிலும் அது ரூபா 139,750,600 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் மிகை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா 108,480,000 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தவறு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு சரியாக கணிப்பிட்டு கணிக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 13,737,637 ஆன 05 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி வேலைப் பெறுமதியை இனங்கண்டு நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த ஒப்பந்தகளுக்காக எந்தவொரு பட்டியலும் நிதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படா திருந்தமையால் பூர்த்தி வேலைப் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படாத வேலைப் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மருத்துவ பீடத்தில் பரா சிகிச்சைக் கட்டிடம் நிர்மாணிக்கும் வேலையில் விலை முரண்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 42,935,892 கணிக்கீடு செய்யப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படாத வேலை மீதி மற்றும் மூலதன கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த தகவல்கள் நிதி பிரிவிற்க வழங்கப்பட்டிருக்க வில்லை. | ஆண்டின் இறுதியில் காணப்படுகின்ற பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 1,443,817 பெறுமதியுடைய நூலகப் புத்தகங்கள் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக பரிமாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்தான மூலதன செலவினங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தவறு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி செயற்திட்டத்தின் (STHRD) நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போதும், கடந்த 04 ஆண்டுகளின் போதும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 889,535,859 பெறுமதியுடைய நடைமுறையல்லாச் சொத்துக்கள், மீளாய்வாண்டிலும், 03 கடந்த ஆண்டுகளில் தொழில்நுட்பபீட கட்டிடம் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,344,804,505 மற்றும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 91,235,422 வருமான செலவினமும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வு கொள்கைகளின் பிரகாரம் STHRD செயற்திட்டம் முடிவடைந்து பல்கலைக்கழகத்திற்கு உரிய சொத்துக்கள் கையளிக்கப்பட்ட பின்னர் தேறிய புத்தகப் பெறுமதி கணக்கீடு செய்யப்படும். | உள்ளக கணக்கீட்டு முறையைத் திருத்தி சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | Restricted Funds மூலம் மீளாய்வாண்டிலும் கடந்த ஆண்டுகளின் போதும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,792,067 பெறுமதியுடைய சொத்துக்கள் | பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் வெளி செயற்திட்டங்களின் மூலம் கொள்வனவு | அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களி ல் வெளிப்படுத்தப்பட் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செய்யப்படுகின்ற சொத்துக்கள் உரிய செயற்திட்டம் முடிவடைந்து பல்கலைகக் கழகத்தில் கையளிக்கப்பட்டவுடன் தேறிய பெறுமதி அடிப்படையாகக் கணக்கீடு செய்யப்படும். | டுள்ளது. |
| (எ) | நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு குறிப்பு 2.4.3.2 இன் நிகழத்தக்க சொத்துக்களின் கீழ் பிணை முறிகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதியை வெளிப்படுத்தும் போது ரூபா 21,929,907 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய பிரிய பிரிவினால் வழங்கப்பட்ட தரவுகள் இததுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தகவல்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஏ) | தடையவியல் விஞ்ஞான பீடத்தில் காணப்பட்ட இருப்பின் பெறுமதியை கணிப்பிடும் போது அலகுக் கிரயம் வழுக்களுடன் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக மிகுதி இருப்பு மீதி மற்றும் ஆண்டின் மிகை ரூபா 3,448,570 அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தவறை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த தவறுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | AHEAD செயற்திட்டத்தின் நிதி மூலங்களில் நிதி உதவிகளில் 2023 திசெம்பர் மாத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,991,446 பெறுமதியுடைய விளையாட்டு உபகரணங்கள் மூலதனமாக்குவதற்காக கணக்கீட்டுக் கொள்கை இனங்காணப்படாமல் நிதி செயலாற்றல் கூற்றில் செயற்திட்ட செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | விளையாட்டு உபகரணங்களின் தன்மையை அடிப்படையாக் கொண்டு இவ்வாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக வகைப்படுத்தப்பட வில்லை. | விளையாட்டு உபகரணங்களை கணக்கீடு செய்வதற்கு உரிய கணக்கீட்டுக் கொள்கையொன்றை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் இறுதியில் முதலீட்டின் அடிப்படையில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 18,251,578 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இந்தத் தவறுகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த தவறையும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மற்றும் பூர்த்தி செய்யப்படாத வேலைகளுக்காக செலுத்த வேண்டிய முறையே ரூபா 1,375,860 மற்றும் ரூபா 855,277 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | அவுஸ்திரேலியா பல்கலைக்கழகத்தினால் நன்கொடையாகக் கிடைத்த அளவீட்டு உபகரணங்கள் சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்காக செலுத்தப்பட்டிருந்த வரி மற்றும் கட்டணம் ரூபா 1,949,733 செயற்பாட்டு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணங்களின் பெறுமதி ரூபா 8,027,127 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 1,949,733 இனாலும், பரிமாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களான மூலதன வருமானம் ரூபா 8,027,127 இனாலும் மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 9,976,859 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் வெளி செயற்திட்டத்திற்காக நன்கொடையாகக் கிடைத்த சொத்துக்கள் உரிய செயற்திட்ட பூர்த்தியின் போது பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட பின்னர் தேறிய புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்படுகின்றமையால் இந்த சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படவில்லை. இது தொடர்பாக வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்கீட்டு கொள்கையைத் திருத்தி சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | 2023 ஆம் ஆண்டில் திசெம்பர் மாதத்திற்காக செலுத்த வேண்டிய அமைய ஊழியர் சம்பளம் ரூபா 8,037,080 கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக அந்த அளவினால் ஆண்டின் மிகை அதிகரித்தும் மற்றும் அட்டுறு மீண்டெழும் செலவினம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறினால் கணக்கீடு செய்யப்படவில்லை. எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் இறுதியில் அட்டுறு செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கா) | கடந்த ஆண்டில் நிலுவை நீர்க் கட்டணத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 6,000,000 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் அப்பெறுமானத்தால் ஆண்டின் மிகை குறைத்தும் மற்றும் திரண்ட நிதியம் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த தவறுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | LEARN செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 15,880,186 ஆக இருந்த போதும் அது ரூபா 14,723,259 ஆக கணக்கீடு செய்யப்பட்ட மையால் ரூபா 1,156,927 இனால் ஆண்டின் மிகை அதிகரித்தும் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இறுதி இரண்டு மாதங்களில் மருத்துவ பீடத்திற்குரிய பட்டியல்கள் அட்டுறு செய்யப்படாமையினால் அது வேறுபாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளது. சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் இறுதியில் அட்டுறு செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | பல்கலைக்கழத்திற்கு உரியதாக ரூபா 517,094,762 பெறுமதியான நிதியம் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதியில் காசு மற்றும் வங்கி வைப்புக்களின் பெறுமதி ரூபா 443,317,793 ஆனமையால் ரூபா 73,776,969 வேறுபாடு காணப்பட்டது. | பல்கலைக்கழத்திற்கு சொந்தமாகக் காணப்படுகின்ற நிதியத்தின் சுய நிதி செயற்பாடுகளின் மிகை உரிய நிதியங்களுக்கு பகிர்ந்தளிக்கும் போது அதில் கிடைக்க வேண்டிய வருமானத்தின் மூலம் உருவாகின்ற வருமானம் ஆன மிகையும் கணக்கில் காண்பிக்கப்படுகின்றது. அதனால் நிதியங்களின் பெறுமதிக்கு சமமாக மேற்கொள்ளப்படுவதில்லை. | பல்கலைக்கழத்திற்கு சொந்தமாகக் காணப்படுகின்ற நிதிய மீதியில் காசு மற்றும் வங்கி வைப்புக்களின் பெறுமதியுடன் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 6.2 ஆம் பந்தி | உரிய அமைச்சரினதும், நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டில் ரூபா 168,028,508 ஆன 14 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | விடயப்பொறுப்பு அமைச்சரினதும், நிதி அமைச்சரினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிச் சட்டம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 282, 290 மற்றும் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய இலக்கம் 03/2022 என்ற தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கையின் (xvii) ஆம் பந்தி | சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துவதற்காக ரூபா 2,017,000,000 கட்டுநிதி கிடைக்கப்பெற்ற போதிலும் ஆண்டின் செலவினம் ரூபா 1,953,840,000 ஆனமையால் ரூபா 63,160,000 ஏனைய செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்திற்கு ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்காக கிடைக்கின்ற நிதி ஏற்பாடுகளில் பற்றாக்குறையின் காரணமாக செலவிட வேண்டிய அத்தியவசிய செலவினங்களுக்காக இந்த மிகை பணம் செலவிடப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | உப கட்டுநிதி வழங்க முடியுமான ரூபா 100,000 ஆன ஆகக் கூடிய எல்லையை விஞ்சி 19 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 8,526,423 செயல் நிமித்த உபகட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. மேலும் 15 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 2,436,685 ஆன முற்பணம் பதவிநிலைத் தரம் அல்லாத உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | தற்போது காணப்படுகின்ற பொருளாதார கஷ்டங்களின் காரணமாக அநேகமான வழங்குநர்களால் கடனுக்கு பொருட்களை வழங்குதல் வரையறுக்கப்பட்டுள்ளது. அதனால் முற்பணத் தொகை பெற்று பொருட்கள் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 571 | ரூபா 13,616,332 கூட்டுத்தொகையான நூலகம் மற்றும் பரிசோதனைக் கூட வைப்புக்களில் குறித்துரைத்த காலத்தை பூர்த்தி செயத வைப்புக்களை இனங்கண்டு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலம் பூர்த்தியான வைப்புக்களை விடுவிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பந்தி | (i) 2000 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற 13 உத்தியோகத் தர்களிடமிருந்து பிணை முறி மீறியதன் காரணமாக அறவிட வேண்டிய ரூபா 92,299,644 தொகை 2024 ஏப்ரல் வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | இந்த மீதிகளை அறவிடுவதற்காக 09 பேர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே மானியம் வழங்கப்பட்டவர்களுக்கும், பிணையாளர்களுக்கும் மீள்நினைவூட்டல் கடிதம் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | (ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சம்பளத்துடன் கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற 05 உத்தியோகத்தர்கள் மற்றும் உள்நாட்டு கற்கை விடுமுறை பெற்ற 03 உத்தியோகத்தர்கள் உரிய கால எல்லையில் கற்கை நடவடிக்கைகளை | கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற இரண்டு உத்தியோகத்தர்கள் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து உரிய சான்றிதழ் பெற்றிருந்தனர். மேலும் இருவருக்கு தண்டனையிடப்பட்ட நட்டத்தை செலுத்துமாறு | உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பூர்த்தி செய்யாமல் மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டிருந்தனர். உரிய உடன்படிக்கையின் பிரகாரம் கற்கை செயற்பாடுகளை பூர்த்தி செய்யாதிருக்குமாயின் அதற்காக செலவிடப்பட்ட சகல செலவினமும் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2024 ஏப்ரல் வரையிலும் ரூபா 66,698,316 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.7 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழ தாபன விதிக்கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 23.3.8 ஆம் பந்தி | காசாளர் பதவியில் கடமைகளை மேவுகை செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு 2020 ஆகஸ்ட் 07 ஆம் திகதி முதல் 2022 யூலை 31 ஆம் திகதி வரையும் மற்றும் 2023 ஏப்ரல் 18 முதல் 2023 யூலை 17 வரையான காலத்திற்காக சம்பளத்தில் 10 சதவீத படியை உள்ளடக்கி போக்குவரத்துப்படி, எரிபொருள் மற்றும் உபசரிப்பு படியாக கூட்டுமொத்தமாக ரூபா 1,344,647 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 ஏப்ரல் முதல் யூலை வரை பதிவாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு போக்குவரத்துப் படி, எரிபொருள் படி மற்றும் உபசரனைப் படியாக கூட்டுமொத்தமாக ரூபா 331,038 செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழ தாபன விதிக்கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 22:2.7 இன் பிரகாரம் பதிற்கடமை நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பதிற் கடமை சம்பளம் செலுத்தப்பட்டுள்ள உரிய இரண்டு உத்தியோகத்தர்களும் பல்கலைக்கழத்தின் சேவைக்காக வருகை தரும்போதும், சேவையிலிருந்து விலகிச் செல்லும் போதும் பேணிச்செல்லப்பட வேண்டிய கடமைகள் அநேகமானவற்றை பேணிச் செல்வதற்காக போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி வழங்குதல் பொருத்தமாக இருந்தது. | தாபன விதிக்கோவை யின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2016 மார்ச் 01 ஆம் திகதிய இலக்கம் 04/2016 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | | | |
| (i) | 4.5 ஆம் பந்தி | பெறுமதி ரூபா 73,635,450 ஆன சுயநிதி உழைக்கும் 11 செயற்பாடுகளுக்காக நிதிக்கூற்றுக்கள் | பல்கலைக் கழகத்திற்கு எந்தவொரு நிதி ரீதியான நலன்களும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | வழங்கப்படாதிருந்த மையால் சுய நிதி செயற்பாடுகளின் கீழ் கொண்டுவரப்படவில்லை. | எடுத்தல் வேண்டும். |
| (ii) | 5.2.3 ஆம் பந்தி | சுயநிதி செயற்பாடுகளில் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புபடுகின்ற பதவியணி அங்கத்தவர்களுக்கு செலுத்தும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்க வேண்டிய ரூபா 131,804,887 ஆன திறந்த மற்றும் தொலைக் கல்வி துறையின் (COLD) அபிவிருத்தி நிதியம் மற்றும் பட்டப்பின் படிப்பு கல்வி பீடத்தில் (FGS) அபிவிருத்தி நிதியத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பல்கலைக்கழக பதவியணியினருக்கு பல்கலைக்கழக நிதியத்திலிருந்து ரூபா 13,469,000 மாத்திரம் வருடாந்த சம்பளம் மற்றும் படியாக செலுத்தப் பட்டிருந்தது. | COLD மற்றும் FGS நிரந்தரப் பதவியணியினர்களுக்கும் பல்கலைக் கழகத்தின் ஏனைய நிரந்தரப் பதவியணியினர்களுக்கும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் மீண்டெழும் செலவினத் தலைப்பில் சம்பளம் / படிகள் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 5.3 ஆம் பந்தி | திறந்த மற்றும் தொலைக்கல்வி துறை மற்றும் பட்டப்பின் கல்வி பீடத்தின் மூலம் அபிவிருத்தி செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 58,490,528 தொகை பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் அந்த பீடங்களின் அபிவிருத்தி நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சுய நிதி செயற்பாடுகள் பன்முகப்படுத்தப் பட்டமையால் அபிவிருத்தி செலவினத் தலைப்புக்களின் அட்டுறுவினை அடிப்படையாகக் கொண்டு சீராக்கப்பட்ட ஒதுக்கீடுகள் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலவு வைக்கப்படாமல் அபிவிருத்தி செய்யப்பட்ட செலவினத் தலைப்பின் மூலம் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2019 நவம்பர் 25 ஆம் திகதிய இலக்கம் 09/2019 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை. | | | |
| (i) | 1(i) ஆம் பிரிவு | அரசாங்கத்தின் 38 வீடுகளின் குடியிருக்கின்ற 38 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2019 திசெம்பர் முதல் 2023 யூலை வரையான காலப் பகுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 8,043,695 குறைத்து வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 08 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2019 திசெம்பர் முதல் 2023 திசெம்பர் வரையான கால எல்லையில் கூட்டுமொத்தமாக ரூபா 2,933,611 ஆன உத்தியோகபூர்வ வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் தகைமை பெற்ற உத்தியோகத்தர்களாக நியமனக் கடிதத்தில் உத்தியோகபூர்வ வீடுகளுக்கு அல்லது உத்தியோகபூர்வ வீடொன்றிற்கான படிக்கு உரித்தைப் பெற்றதாக குறிப்பிட்ட உத்தியோகத் தர்களாக இருந்த போதும் இந்த பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்களின் நியமனக் கடிதத்தில் எந்த ஒன்றும் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2018 நவம்பர் 26 ஆம் திகதிய இலக்கம் 15/2018 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | ஏதாவது பதவியணியினர் காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்தின் சேவை பங்களிப்பு திறைசேரி நிதிஏற்பாட்டின் மூலம் செலவிட முடியாதிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 1,283,078 திறைசேரி நிதி ஏற்பாட்டின் மூலம் செலவிடப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இலக்கம் 718 சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது செல்லுபடியாகக் காணப்படுகின்ற சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2013 மே 14 ஆம் திகதிய இலக்கம் 08/2013 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | இந்த நாட்டில் தொழிலில் ஈடுபடுவதற்காக ஏழு வருட விடுமுறை பெற்றுச் சென்ற விரிவுரையாளர் அந்த விடுமுறைக்காலத்திற்கு இடையே தனிப்பட்ட ரீதியில் வெளிநாட்டு சுற்றுலா செல்வதற்கான விமானப் பயணச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 330,000 தொகை வழங்குதல் பல்கலைக்கழக மானியங்கள் | சுற்றிக்கை இலக்கம் 08/2013 இன் பிரகாரம் ஏழு வருட விடுமுறைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தனியார் வெளிநாட்டு சுற்றுலாவிற்கான விமான பிரயாண அனுமதிப் பத்திரம் வழங்க முடியாதிருந்தமை பல்கலைக்கழக மானியங்கள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆணைக்குழு நிராகரித்திருந்த போதிலும் சுற்றுலாவின் ஒரு வருடத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டைக் கவனத்திற் கொண்டு நிருவாக சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தினால் அந்த தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. | ஆணைக்குழு ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது அறிவித்திருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டினை கவனத்திற் கொண்டு பல்கலைக்கழக நிருவாக சபை தீர்மானத்தை எடுக்குமாறு பின்னர் அறிவிக்கப்பட்டமையினால் மீளளிப்புச் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 505,333,576 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 381,445,894 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 123,887,682 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டில் மீண்டெழும் மானியம் ரூபா 270,000,000 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக கல்விசார் பதவியணியினரின் நாளாந்த வருகை மற்றும் வெளிச்செல்கை கைவிரல் அடையாள இயந்திரம் அல்லது வருகைப் பதிவேட்டில் குறிப்பிடப்படாதிருந்த போதிலும் கல்விப் பிரிவின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள நேர அட்டவணை பூர்த்தி செய்யும் செயல் முன்னேற்றம், விரிவுரைக் குறிப்பு புத்தகங்கள் (Lecture record book) இன் மூலம் உறுதிப்படுத்தக் கூடியதாக இருந்ததாக உபவேந்தரால் கடந்த ஆண்டின் போது கணக்காய்வு அறிவிக்கப் பட்டிருந்தது. எனினும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 2022 சனவரி முதல் 2023 யூலை வரையான காலப்பகுதியில் தடையவியல் விஞ்ஞான பீடத்தில் 04 கல்விசார் பிரிவுகளில் விரிவுரைக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. விரிவுரைக் குறிப்புப் புத்தகங்கள் நாளதுவரையாக பேணிச்செல்லப்படாத சந்தர்ப்பங்களின் போது மாணவர்களின் வருகை பதிவேட்டின் மூலம் விரிவுரையாளரின் வருகை மற்றும் விரிவுரை நடாத்துதல் தொடர்பாக உறுதிப்படுத்த | தடயவியல் விஞ்ஞான பீடத்தில் கல்விப் பிரிவுகளில் விரிவுரைக்குறிப்பு புத்தகம் பேணிச்செல்லப்பட்ட போதிலும் உரிய காலப் பகுதியில் விரிவுரைகள் இணையவழி முறைமையின் கீழ் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் விரிவுரை குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்குவதற்கு வசதியீனமாக இருந்தது. எனினும் தற்போது விரிவுரை குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை | கல்விசார் பதவியணியினருக்காக சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்தும் போது அவர்களால் நிறைவேற்றப்பட்ட சேவைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறையான திட்டமுறைமையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முடியுமாக இருந்த போதிலும் 03 கற்கைப் பிரிவுகளின் மாணவர்களின் வருகை பதிவேடு உரிய கற்கை பிரிவுகளில் கோவையிடப்படாமை யினால் அந்த தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தற்போது பயன்படுத்தப்படுகின்ற வீட்டுக் கழிவு கூட்டுப்பசளை மாத்திரம், பாரியளவிலான உற்பத்தி மாதிரியாக சந்தையில் அறிமுகப்படுத்துதல் மற்றும் உயர்தரத்தை உடைய கால் நடை உணவு மற்றும் சேதனப்பசளை வணிக மட்டத்தில் உற்பத்தி செய்யும் நோக்காகக் கொண்டு ஆராய்ச்சி செயற்திட்டமொன்றிற்காக கற்கை பரவல் மற்றும் அபிவிருத்தி துரிதப் படுபத்துதல் (AHEAD) உலக வங்கி கடன் உதவியின் கீழ் ரூபா 50,000,000 செலவிடப் பட்டிருந்தது. எனினும் வழங்கப்பட்ட பாரிய அளவிலான கூட்டுப்பசளை பாத்திரங்களுக்காக இலங்கை புலமைப்சொத்து அலுவலகத்தால் அறிவிக்கப்பட்ட குறிகாட்டிகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அந்த பிரிவுடன் ஒன்றிணைந்து அமுல்படுத்து வதற்கு பயிர்ச் செய்கை அலகு (Haevesting Unit) உம் வணிகமயப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே அந்த குஞ்சுகளின் மூலம் தயாரிக்கப்பட்ட உணவு மற்றும் உணவு தயாரித்தல் தொழில்நுட்ப முறைமைக்காக பேடன் அனுமதிப்பத்திரம் விண்ணப்பிக்கப்பட்ட போதும் தொழில்நுட்ப முறைமையில் காணப்பட்ட நலிவுகளின் காரணமாக அந்த விண்ணமும் நிராகரிக்கப்பட்டிருந்தது. உரிய குறிகாட்டிகளைப் பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் செலவிடப்பட்ட செலவினங்கள் பயனற்றதாக இருந்தது. | ஆராய்ச்சி நிராகரிக்கப்படுதல் வழமையானதாகும். தொழில்நுட்ப காரணங்களினால் மாத்திரம் அது ஏற்படுவது இல்லை. இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தால் 2023 யூன் 02 ஆம் திகதி உரிய பேடன் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் உரிய விண்ணப்பத்திற்கு மேலும் திருத்தங்கள் உள்ளடக்க முடியும். அதன் பிரகாரம் உரிய திருத்தச் செயற்பாடுகள் இப்போது மேற்கொள்ளப்படுகின்றது. | செலவிடப்பட்ட பணத்திற்குரிய போதியளவான நலன்களை பெற்றுக் கொள்வதற்காக உரிய குறிகாட்டிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ERASMUS செயற்திட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் விளையாட்டு உபகரணங்களுக்காக ரூபா 2,156,500 (யூரோ 9,500) ஒதுக்கப்பட்டிருந்ததுடன் | ஊனமுற்ற விளையாட்டு உபகரணங்களாக கொள்வனவு செய்வதற்கு கூறுவிலை கோரப்படாதிருந்ததுடன் கூறுவிலை | செயற்திட்ட உடன்படிக்கை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | அதில் ரூபா 1,362,000 ஊனமுன்ற விளையாட்டு உபகரணங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஊனமுற்ற விளையாட்டு உபகரணங்கள் எதுவும் கொள்வனவு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப் பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 124,498 செலவிடப்பட்டிருந்தது. | அனுப்பப்பட்ட பொருட்கள் மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பாதீட்டு நிதி ஏற்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019/2020 கல்வி ஆண்டிற்கு தடயவியல் விஞ்ஞான பிரிவில் 04 கற்கை பிரிவுகளுக்காக 176 மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன் அந்த மாணவர்களின் முதலாவது வருடம் முதலாவது அரையாண்டில் விரிவுரைகள் 2019 செப்டெம்பர் 13 ஆந் திகதி இணையவழி (Online) ஊடாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பிரயோர பரிசோதனைகள் மற்றும் பரீட்சைகளுக்காக அந்த மாணவர்கள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் சில தினங்களில் மாத்திரம் பல்கலைகக் கழகத்திற்கு அழைக்கப்பட்டிருந்ததுடன் கல்விசார் நடவடிக்கைகளுக்காக பதிவு செய்து ஒரு வருடமும் 10 மாதமும் அதாவது பாடநெறி காலத்தில் சரியாக அரைவாசி இணையவழி ஊடாக பிரிவுரைகள் நடாத்தப்பட்டமையால் அந்த மாணவர் குழுக்களுக்கு பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்து கல்விசார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆலோசனையின்படி அதிகளவான மாணவர் எண்ணிக்கை சேர்க்கப்பட்ட போதிலும் அந்த எண்ணிக்கைக்கு சமமான பௌதீக வளங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் விடுதி வசதிகள், விரிவுரை மண்டபம் மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பாக அதிக கஷ்ட நிலைமைக்கு முகங்கொடுத்து கல்விசார் நடவடிக்கைகள் பேணிச்செல்லப்படுகின்றது. அதனால் 2019/2020 கல்வி ஆண்டிற்குரிய உரிய மாணவர்கள் இணையவழியின் கீழ் கல்விசார் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட போதும் தற்போது பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளுக்கு சமூகமளிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்து கல்விசார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டில் இருந்து 2021 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் ஆராய்ச்சிக் காலஎல்லை முடிவடைந்த 10 ஆராய்ச்சிகளுக்கான மானியமாக ரூபா 20,798,126 செலுத்தப் பட்டிருந்த போதிலும் 2024 மார்ச் 25 ஆம் திகதி வரையிலும் இறுதி ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி மானியம் வழங்கப்பட்ட 10 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இறுதி அறிக்கை பெற்றுக்கொள்வதற்கான கட்டத்தில் உள்ளது. | இறுதி ஆராய்ச்சியை அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | Building Resilience Tropical Agro Eco systems (BRITAE) செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டின் மூலம் 2022 ஆம் ஆண்டின் போது பயிற்சி ஒன்றிற்காக வெளிநாடு சென்ற 04 உத்தியோகத்தர்களுக்கு | இந்த பணத்தை அறவிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிகமாக அனுப்பப்பட்ட ரூபா 1,210,518 தங்குமிட படிகள் மற்றும் பிரயாணச் செலவினம் அறிக்கைத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஏழு வருட விடுமுறை பெற்று 2022 மார்ச் 02 ஆம் திகதியில் இருந்து 01 வருடமும் 08 மாத காலமும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியில் கடமையாற்றி இருந்த விரிவுரையாளருக்கு சப்ரகமுவ மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கற்கை படிகள் (Academic Allowance) ஆக முறையே கூட்டுமொத்தமாக ரூபா 3,232,548 மற்றும் ரூபா 3,605,901 செலுத்தப்பட்டிருந்தது. | நிருவாக சபையின் அங்கீகாரத்தின்படி அவர்களின் சம்பளம் மற்றும் அந்த சம்பளத்திற்குரிய படிகள் வழங்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தருக்கு ஒரே காலப் பகுதிக்காக ஒரே வகையான படிகள் இரு தடவை செலுத்துதலை பரிந்துரை முடியாது. |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) கடனின் கீழ் அமுல்படுத்தப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி செயற்திட்டம் (STHRD) மூலம் 2021 ஆம் ஆண்டில் தொழில் நுட்ப பீடத்திற்காக நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் போது, அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்காமல் முன்னைய அனுபவத்துடன் உள்ள வழங்குநர் தெரிவு செய்யப்பட்டு ஒட்டுமொத்தப் பெறுகையில் 76 சதவீதம் அதாவது ரூபா 20,200,200 ஆன பெறுமதியில் 118 வகையான புத்தகங்களுக்கு உரிய 421 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 7,596,400 பெறுமதியான 33 வகையான புத்தகங்களுக்குரிய 114 அலகுகள் முன்னர் பயன்படுத்தப்பட்ட புத்தகங்கள் (used book) ஆகும். அவ்வாறே ரூபா 6,922,982 செலவில் பாடப் பரிந்துரைகளுக்கு உரித்தற்ற 69 வகையான புத்தகங்களில் 179 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பெறுகைகளின் போது சர்வதேச சந்தையில் பழைய மற்றும் புத்தகங்கள் விற்பனை செய்யப்படுகின்ற ஆகக் குறைந்த விலைகளுடன் ஒப்பிடும் போது 63 வகையான புத்தகங்களில் 227 அலகுகள் அதிகரித்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டமையினால் ரூபா 12,116,310 நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2024 ஏப்ரல் 30 ஆம் திகதிய 307 ஆவது நிருவாக சபையின் பரிந்துரையின் அடிப்படையில் அந்த பாடங்கள் தொடர்பான அறிவுடன் வெளிவாரி சுயாதீன விசாரணையாளர் நியமித்து முறையான சுயாதீன விசாரணையொன்று மேற்கொள்ளப்படும். | ஆராய்சிகளை விரைவுபடுத்து பொறுப்புவாய்ந்த நபர்களுக்காக பரிசோதனைகளை விரைவுபடுத்தி பொறுப்பு வாய்ந்த நபர்களுக்காக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்து நட்டத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாணவர்களின் பிரயோக திறனை அதிகரித்தல், விவசாயிகள் மற்றும் சிறிய / நடுத்தர அளவிலான விவசாய தொழில் முயற்சியாளர்களுடன் ஆரம்ப மட்டத்தில் இருந்தான செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் மாணவர்களினதும் பதவியணியினர்களினதும் துறைகளுக்கான அறிவினை விருத்தி செய்யும் நோக்கில் உயர் கல்வியினை விரைவுபடுத்துதல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்துதல். (AHEAD) செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 2021 பெப்ரவரி 24 ஆம் திகதி ரூபா 13,895,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் ஆய்வுகூட பேருந்து வண்டி 2021 மார்ச் முதல் 2023 திசெம்பர் வரையான காலப்பகுதியில் 06 சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் கல்விசார் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமையால் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | இந்த பேருந்து வண்டி தற்போது விவசாய விஞ்ஞான பீடத்தில் மற்றும் ஏனைய பீடங்களனதும் மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |

**3.6 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருத்துவ பீடத்தில் ஆய்வு கூடப் பரிசோதனைக்காக அத்தியவசியமான இரசாயன பொருட்களை உள்ளடக்கிய ஏனையவைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 13,662,588 ஆன 06 பெறுகை செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப் பட்டிருந்தது. விரைவாக வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதும் ஆண்டின் இறுதி வரையிலும் அவற்றை கொள்வனவு செய்யாமையினால் மருத்துவபீட மாணவர்களின் பிரயோக பரிசோதனைகளுக்காக பாதகமாக தாக்கமளித்திருந்தது. | நிதிஏற்பாடு வரையறுக்கப் பட்டமையால் இந்த பெறுகைள் மற்றும் கட்டளைகள் தாமதமடைந்திருந்தது. | கல்விசார் நடவடிக்கை களுக்காக தேவையான வளங்கள் தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 ஒப்பந்த நிருவகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் பிரதான நூலக கட்டிடம் நிர்மாணிக்கும் வேலைக்காக வேலை | உரிய முற்பணப் பிணைமுறியை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2020 சனவரி 13 | முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பித்தல் முற்பணமாக ரூபா 63,010,287 ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருக்கும் போது ஒப்பந்தகாரர் வேலையினை இடைநடுவில் நிறுத்தி இருந்தார். எனினும் ரூபா 72,461,830 ஆன (பெறுமதிசேர் வரியுடன்) முற்பணம் பிணைமுறை காலாவதியாவதற்கு முன்னர் பணமாக்கி கொள்ளாமையினால் முற்பணத் தொகையில் இருந்து ரூபா 28,809,334 தீர்த்துக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | ஆந் திகதிய கடிதம் மூலம் மூலதனம் மற்றும் திட்டமிடல் பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளர் அந்த நிறுவனத்திற்கு அறிவித்திருந்தார். அவ்வாறே 2020 பெப்ரவரி 17 ஆம் திகதய முன்னாள் இருந்த பதிவாளரின் கையொப்பத்துடன் கடிதம் ஒன்று மீள் நிளைவூட்டலும் அனுப்பப்பட்டுள்ளது. எனினும் வங்கியால் முற்பணப் பிணை முறியை நீடித்தல் நிராகரிக்கப்பட்டிருந்தது. | எடுக்க வேண்டியிருந்ததுடன் ஒப்பந்த நிருவாகத்தை முறைமைப் படுத்துதல் வேண்டும். அவ்வாறே உரிய உத்தியோகத்தர்கள் பெறுகை நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்த நிருவாகத்திற்குரிய சட்டம், விதிகள் தொடர்பாக போதியளவான அறிவினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் பதவியணியினருக்காக வீடமைப்பு தொகுதி ஒன்றை நிர்மாணிக்கும் வேலையின் போது Powder Coated Aluminium மற்றும் Cladding பயன்பாட்டிலிருந்து பூர்த்தி செய்யப்பட வேண்டிய 307 Plywood கதவுகள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் கதவுகளில் 316 Door Closers பொருத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு காணப்படும் போது விலை உத்தேச திட்டத்தின் (Lump sum) வீட்டு அலகொன்றிற்காக ஒரே தடவையில் பணமாக (price proposal) அங்கீகரிக்கப்பட்ட மொத்த பெறுமதியும் செலுத்தப்பட்டமையால் ரூபா 13,936,750 நட்டம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி பட்டியலின் பிரகாரம் 03 வேலை விடயங்களுக்காக ஒப்பந்தகாரரால் நிறைவேற்றப்படாத மற்றும் அவர்களால் கோரப்படாத ரூபா 2,600,000 தொகையும் வேலை பொறியியலாளரின் சான்றுப்படுத்தலுடன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்த கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளில் Door Closers பொருத்துவதற்கு முன்மொழியப்பட வில்லை. துறைசார் நிபுணத்துவமுள்ள அளவிடை ஆய்வாளர் மூலம் அலுமினிய கதவுகள் மற்றும் பிளைவூட் கதவுகளுக்கிடையே நிதி ரீதியான வேறுபாடு கணிப்பிடப்பட்டு அது ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்கின்றது. ரூபா 2,600,000 இறுதியாக மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த கம்பனியின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிப் பட்டியலில் காணப்பட்ட வழுக்கான நிலைமையின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | நிர்மாணித்து நிர்மாணங்களைக் கட்டியெழுப்புதல் (design & built) ஒப்பந்தங்களின் போது அங்கீகரிக்கப்பட்ட கிரயம் மற்றும் திட்டங்களை திருத்தாதிருத்தல் வேண்டும். |